# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6
## பத்திரிகைச் செய்தி

2018–2019ம் ஆண்டிற்கான முதுகலை பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 காலிப் பணியிடங்களுக்கான நேரடி நியமன பணித் தெரிவிற்கு 2144 காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு 27.09.2019, 28.09.2019 மற்றும் 29.09.2019 ஆகிய 3 தினங்கள் கணினி வழித்தேர்வு நடைபெற்றது. காலிப்பணியிட எண்ணிக்கையின் அடிப்படையில் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பணிநாடுநர்கள் 1:2 என்ற விகிதத்தில் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் அழைக்கப்பட்டு சான்றிதழ் சரிபார்ப்பு பணி 11 மாவட்டங்களில் 15 பாடங்களுக்கு 08.11.2019 மற்றும் 09.11.2019 ஆகிய நாட்களில் இணையவழியில் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு தற்காலிக தெரிவு சார்ந்த விவரம் 20.11.2019 அன்று முதற்கட்டமாக 12 பாடங்களுக்கு வெளியிடப்பட்டது. தற்பொழுது தமிழ், வரலாறு மற்றும் பொருளியல் பாடங்களுக்கான தற்காலிக தெரிவு முடிவுகள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் www.trb.tn.nic.in வெளியிடப்பட்டுள்ளது.

நாள் : 03.01.2020

தலைவர்